C.C.No.29/2011

Date: 12.07.2018

அ.சா.2 ராஜேஸ்வரி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை:

20.03.2010ம் தேதி சம்பவம் நடந்த அன்று புகார் கொடுத்தேன். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. புகாரை நான் எழுதவில்லை. போலீசார் எழுதினார்கள். 20.03.10ம் தேதி பகல் 12 மணியளவில் நானும், எனது கணவரும் சேர்ந்து எதிரி மின்னல்கொடியை கம்பால் அடித்து கையை முறித்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. கர்ப்பமாக இருந்த பெண்ணை நாங்கள் தாக்கியதால் அவருக்கு கரு கலைப்பு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் யார் யாரை எங்கு தாக்கினார்கள் என்று குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் முதல் தகவல் அறிக்கையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் காவல்துறையால் எழுதப்படவில்லை என்றும், எனது கணவரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி தேவனேசனின் தகப்பனார் மேலூர் சார்பு நீதிமன்றத்தில் எனது கணவர்மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 5 நபர்கள்மீது போட்டுள்ளனர். இந்த வழக்கு சம்மந்தமாக யார் அனுப்பினார்கள், எப்படி அனுப்பினார்கள் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் வழக்கறிஞர் என்பதால் எதிரிகள் கொடுத்த புகாரினை எடுக்கவிடாமல் தடுத்து எனது வழக்கை மட்டும் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற முதல் விசாரணையிலும், போலீஸ் விசாரணையிலும் உள்ள சங்கதிகளை எனது கணவர் சொல்லி என்னால் சொல்லப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. போலீசார் விசாரணையில் மருத்துவமனையில் என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்ரே எடுப்பதற்காக அனுப்பியதாகவும், நான் போகாமல் மறுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு எந்த காயமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த காயத்திற்காக சிகிச்சை பெற்றேன் என்றால் எனது உடம்பில் ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை பெற்றேன். எதிரிகள் என்னை தாக்கவும் இல்லை, எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், அதனால்தான் குறிப்பாக எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை தாக்கியதாகவும், அதில் எதிரிகள் எங்கள்மீது புகார்கொடுத்து அதன்பேரில் கீழவளவு காவல் நிலையத்தில் குற்ற எண். 71/10

வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது பொய் வழக்கு. எனக்கு கீழவளவு காவல்நிலையம் தெரியும். கீழவளவு காவல்நிலையத்திற்கு ஆட்டோவில் வந்தோம். 20.03.10ம் தேதியன்று மாலையே எங்கள் வீட்டிற்கு காவலர்கள் வந்தார்கள் என்றால் நான் மருத்துவமனையிலிருந்தேன். போலீசார் வந்துவிட்டு மறுநாள் என்னை விசாரிக்கும்போது சொன்னார்கள். மருத்துவமனைக்கு போகும்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் ஞாபகமில்லை. மருத்துவமனையில் வந்து விசாரித்தனர். தேவனேசனின் பூர்வீக சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற என்னத்துடன் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது சம்பவ இடம் குறித்து சிவில் வழக்கு நடந்து வந்தது என்றால் ஞாபகமில்ல. எதிரிகள் எந்த தப்பும் செய்யவில்லை என்றும், எதிரிகளை வதைப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.